## இலங்கை கால்பந்து சம்மேளனம் - 2017

இலங்கை கால்பந்து சம்மேளனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, நிதிய மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1993 இன் 47 ஆம் இலக்க விளையாட்டுக்கள் (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென கருதும் மீளாய்வாண்டின் சம்மேளனத்தின் செயற்பாடுகள் தொடர்பான எனது அவதானிப்புகள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் நிறைவேற்றுக் குழுவின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில் முயற்சிகளிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் நிறைவேற்றுக் குழுவின் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) சம்மேளனத்தின் பதவியணியினருக்கு சேவை ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒவ்வொரு ஆண்டிற்காக அரை மாதச் சம்பளத்தினை அடிப்படையாகக் கொண்டு ரூபா 5,530,417 தொகையான ஓய்வூதிய நல பொறுப்பு கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் நியமத்தில் ஊழியர் நலன்கள் தொடர்பாக 28 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் ஓய்வூதிய நலன்கள் பொறுப்பில் தற்போதைய பெறுமதி இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளூராட்சிமன்ற நிறுவனங்களுடன் ஏற்படுத்திக்கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பேரில் சம்மேளனத்தின் மூலம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் உள்ளுராட்சி மன்றங்களுக்குரிய விளையாட்டரங்குகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக சர்வதேச உதைப்பந்தாட்டச் சம்மேளத்தினால் நேரடியாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்களின் பெறுமதி குத்தகை சொத்துக்களின் கீழ் தவறாக கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் மீது பிற்போடப்பட்ட வரவுப் பொறுப்பொன்றாக ரூபா 137,994,358 ஐந்தொகை திகதியில் நடைமுறையல்லாத பொறுப்புக்களின் கீழ் தவறாக காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த வரவுப் பொறுப்புக்களில் ரூபா 8,291,439 தொகை மீளாய்வாண்டின் போது வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கணக்காய்வின்போது மேற்கொள்ளப்பட்ட கணக்கிடலின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு, ரூபா 1,583,526 ஆல் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 9,900,000 கிரயமான இரண்டு குத்தகை வாகனங்கள் 2014 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதிக்கான பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 209,251 பெறுமதியான குத்தகை பொறுப்பு மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் இருந்து விடுபட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்படாத நிதிய மாற்றங்களாக (குறிப்பு 5.3) ரூபா 14,525,389 கிடைக்கவேண்டிய கணக்குகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்ததடன் இது சம்மேளனத்தின் முன்னாள் நிதி முகாமையாளரால் போட்டி நடுவர்களின் தவறான பெயர்கள் உள்ளடக்கப்பட்டு பணம் பெற்றுக்கொண்டுள்ளதாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்டது. இப் பண மோசடி தொடர்பாக குற்றத்தடுப்புப் பரிசோதனை திணைக்களத்தினால் மேலதிக பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் மோசடி செய்யப்பட்ட பணத்தின் அளவு கணக்காய்வு திகதியான 2018 யூலை 30 ஆம் திகதி வரை கண்டறியப்படவில்லை. இப்பணத்தை தவறாக பெறவேண்டிய கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களின் மூலம் இம் மோசடி தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கீழே காட்டப்பட்டுள்ள விடயங்களுக்கு முன்னால் காண்பிக்கப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| | **கணக்கு விடயங்கள்** | **பெறுமதி** | **சமர்ப்பிக்கப்பட்டிராத சான்றுகள்** |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | வருமதிகள் கணக்குகள் | 1,363,696 | விரிவான பட்டோலைகள், உறுதிப்படுத்தும் ஆவணம் |
| (ii) | கிடைக்க வேண்டிய அனுசரணையாளர் கட்டணங்கள் | 15,770,576 | |
| (iii) | ஏனைய கிடைக்க வேண்டிய கடன்கள் | 1,000,000 | விரிவான பட்டோலைகள் |
| (iv) | நிறுத்தி வைக்கப்பட்ட நிதியம் | 4,582,669 | |
| (v) | ஏனைய நிலையான சொத்துக்கள் | 102,797,212 | |
| (vi) | தலைமை அலுவலக கட்டிடம் | 41,720,741 | |
| (vii) | கட்டிடம் - பத்தகான | 29,521,436 | உறுதிப் பத்திரம் |
| (vii) | மோட்டார் வாகனங்கள் | 7,371,100 | பதிவுச்சான்றிதழ், பௌதீக பொருள் மெய்மையாய்வு அறிக்கை |
| (ix) | குத்தகையாதனங்கள் | 135,865,740 | குத்தகை ஒப்பந்தம், விரிவான பட்டோலைகள் |

| | | | |
|---|---|---|---|
| (x) | வைப்பு - Airtel Lanka Ltd | 720,000 | வைப்புக்கான பற்றுச்சீட்டு மற்றும் ஒப்பந்தம் |
| (xi) | வைப்புக்கள் - பத்தகான உடற்பயிற்சி சங்கம் | 150,000 | |
| (xii) | நிலையான வைப்பு | 1,663,569 | நிலையான வைப்பு சான்றிதழ் |
| (xiii) | இருப்புகள் | 451,520 | பௌதீக பொருள் மெய்மையாய்வு அறிக்கை |
| (xiv) | பெற வேண்டிய வியாபார மீதிகள் | 39,663,244 | காலப் பகுப்பாய்வு |
| (xv) | செலுத்த வேண்டிய வியாபார மீதிகள் | 29,269,919 | |

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.4 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக சம்மேளனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 31,938,593 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 22,454,656 ஆக காணப்பட்டமையால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 9,483,937 ஆல் அதிகரித்திருந்தது. செயற்பாட்டு வருமானம் ரூபா 43,655,836 ஆல் குறைவடைந்த போதிலும் செயற்பாட்டு செலவினங்கள் ரூபா 52,883,384 ஆல் வீழ்ச்சியடைந்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 4 கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2 பிரிவின் பிரகாரம் ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஒவ்வொரு நிதியாண்டு தொடங்குவதற்கு முன்னரும் பாதீடொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சம்மேளனத்தினால் மீளாய்வாண்டிற்காக பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இவ் விடயம் 2016 ஆம் ஆண்டு கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தும் 2017 ஆம் ஆண்டின் போது சீர்செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 பெறுகைத்திட்டம்**

2006 இன் அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2 இற்கு இணங்க இலங்கை கால்பந்து சம்மேளனத்தினால் 2017 ஆம் ஆண்டிற்கான பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவையின் நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ள வேண்டிய போதிலும் இலங்கை கால்பந்து சம்மேளனத்தினால் உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின்போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் காலத்திற்குக் காலம் சம்மேளனத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு இயலுமான வகையில் பாதீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்று காணப்படாமை |
| (ஆ) | முற்பணக் கொடுப்பனவுகள் | முற்பணப் பதிவேடொன்று பேணப்படாமை மற்றும் முற்பணம் தொடர்பான கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை மேற்கொள்ளப்படாமை. |
| (இ) | நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம் | நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்படாமை மற்றும் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படாமை. |
| (ஈ) | கணக்கீடு | நாளேட்டு பதிவுகள் இடும் போது முறையான அதிகாரங்களின் கீழ் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |